தமிழ் இலக்கிய நயம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி 1

1. “ தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோகம் புரிந்தொரு வேளை தன்னில் …” எனும் கவிதை வரிகள் இடம் பெற்ற கவிதை எது?
2. இக்கவிதையின் ஆசிரியர் யார்?
3. அவர் எழுதிய வேறு மூன்று படைப்புக்களை கூறுக.
4. “சையோகம்” என்பதன் பொருள் என்ன?
5. ‘சர்வகலாசாலை’ எனும் சொல் எதனைக்குறிக்கிறது?
6. ‘சுவடிச்சாலை’ என்றால் என்ன?
7. ‘ஆசித்த’ என்பதாற் கருதப்படுவது என்ன?
8. “மரம் என்பது உயர்திணை” எனும் பத்தி எழுத்தின் ஆசிரியர் யார்?
9. அவரது வேறு இரு படைப்புக்களை கூறுக.
10. சரித்திரச்சாலையில் வெளிப்படும் மரங்கள் எவை என ஆசிரியர் கூறுகிறார்?
11. மனிதன் படைத்த மரங்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளவை எவை?
12. மனிதனின் இறப்பிற்கும் மரத்தினது இறப்பிற்கும் உள்ள வேறுபாடு எவ்வாறு கூறப்படுகிறது?
13. மரங்களும் மனிதனும் எவ்வெவற்றுக்காக கை நீட்டுகிறார்கள் ?
14. ‘சிபி’ என்பது யார்?
15. ‘சீதக்காதி’ என்பது யார்?
16. “மென்மையே வாழும் எனும் பத்தி எழுத்தில் டார்வின் மற்றும் கொன்பூசியஸ் இருவருக்குமிடையே கூறப்படும் கருத்து முரண்பாடு யாது?
17. மென்மையானவை நீண்ட நாள் இருக்குமென்பதற்கு கொன்பூசியஸ் கூறிய உதாரணம் யாது?
18. போர்விரனை விட பெண் வலிமையானவள் என்று திருவள்ளுவர் கூறுவது ஏன்?
19. வன்மையை விட மென்மையே சிறப்பு என்பதற்கு காந்தியடிகள் உதாரணமாவது எவ்வாறு?
20. கல்லுக்கும் வேருக்கும் எவ்வாறு வேற்றுமை காட்டப்பட்டுள்ளது?
21. வாய்மொழிப்பாடலுக்கு வழங்கப்படும் வேறு இரு பெயர்களைத்தருக.
22. வாய்மொழிப்பாடல்கள் பெரும்பாலும் எவற்றை பாடுபொருளாகக் கொண்டுள்ளன?
23. மருத்துவச்சிக்கு வழங்கப்படும் பரிசுப்பொருள்கள் எவை?
24. மருத்துவச்சி வாழ்த்து எப்போது பாடப்படுகிறது?
25. மருத்துவிச்சி குழந்தையை வாழ்த்தும் ஒரு பாடலடியை எழுதுக.

(25X2= 50)

www.ked.lk

பகுதி 2

1. 1) 'புத்தகசாலை' பாடத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் பாடலடிகளின் சிறப்பினை விளக்குக.

அ) ''அமுதம்போல் செந்தமிழ்க் கவிதை நூல்கள்..''

ஆ) ''மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து....''

இ) ''கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே...'' (2 X 3 = 9)

11) நூலகம் குறித்த கவிஞரின் எதிர்பார்ப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது? (6)

2. 1) ''மரம் என்பது உயர்திணை'' என்பதில் மரம் மனிதனை விட உயர்ந்தது என்பதற்கான காரணங்களாக ஆசிரியர் குறிப்பிடும் விடயங்கள் எவை?

11) மரங்களின் சிறப்பை எடுத்துக்கூறுவதற்கு இப்பத்தி எழுத்தாளர் கையாண்டுள்ள உத்திகள் எவை?

(2X 5= 10)

3. 1) ''மென்மையே வாழும்'' எனும் பத்தி எழுத்தில் மென்மை – வன்மை இரண்டுக்குமிடையிலான ஒப்பீடு எவ்வாறு இயற்கையின் உதவியுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?

11)''மென்மையே வாழும்'' என்பதற்கு பத்தி எழுத்தாளர் கையாண்டுள்ள உத்திகள் எவை?

(2X 5= 10)

4.1) ''ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய்
இருந்து வாழ்க !'' ..... எனும் அடிகள் எதனை உணர்த்துகின்றன?

11) மருத்துவச்சியின் மனப்பாங்கு இப்பாடலில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

111) பாடலில் காணப்படும் எளிய மொழிநடை இ அழகியல் அம்சங்கள் பற்றிக் கூறுக.

(3X 5= 15)

www.ikdu.lk